ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

22.05.2025

1. கலியிடர் கஷ்டங்கள் விலகி
காப்பாக உலக மக்கள் வாழ
அழியாமை எனும் ஞானம் அருளி
அரங்கன் யான் அற்புதம் தன்னை

2. தன்னையே பிரணவக்குடிலில் வரமாக
தஞ்சமடைபவர்க்கு அருளி நிற்க
நன்னாளாம் விசுவாவசு விடை திங்கள்
நாட்டிட ஈராம் குருவார அருளாசி

3. ஆசிதனை அரங்க மகான் தானும்
அருட்சுவடி வழி தந்தருள்வேன்
ஆசி தந்து சோதி சொரூபமாக
அரங்கனும் வேண்டும் வரம் தர

4. தருகவே கலியுக மக்களெல்லாம்
தங்களின் கட்ட நட்டங்களும்
கருமவினைகளும் வென்று மீள
காப்பாயென பிரணவ குடிலுக்கு வந்து

5. வந்துமே சோதி வழிபாடு செய்து
வணங்கி அருளமுதை உண்டு
சிந்தை மகிழவே என் நாமமதை
செபதபமாகச் செய்து கொண்டு

6. கொண்டுமே அரங்கன் என் தருமத்தில்
குறைவிலா பொருளுதவி செய்து
தொண்டர்களாகியே இணைந்து
தேசமெங்கிலும் கிளைகள் தன்னை

7. தன்னையே அரங்கனென் பேரிலே
தருமசாலைகளாகத் துவக்கி
அன்னதான சேவை புரிந்திட
அவரவர்க்கும் அரங்கனென் அனுகூலம்

8. அனுகூலம் பரிபூரண சக்தியாகி
அற்புதம் பல கண்டடைவர்
ஞானமோடு தான தருமவானாக
ஞானிகளிடத்தில் அடையாளம் உருவாகி

9. ஆகியே அரங்கன் என் வழியில்
அகிலத்தில் அளவிலா ஞானிகள்
செகம் காக்கும் வண்ணம் மிகுந்து
சுப்பிரமணியர் மகிழவே உலகம்

10. உலகம் ஞான ஆட்சிதனை
உத்தமமாய் கண்டடைந்து
கலகம் பேரழிவு ஏதும் அணுகா
காப்பான நல்லுலகமாகத் தேறி

11. தேறியே ஞானவான்கள் நிரம்ப
தேசமெங்கும் ஞானிகள் வெளிப்பட
மாறுதல் பெறும் கலியுகமே ஞானயுகம் ஆக
மொழிந்திட்ட அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி